3. கவன ஈர்ப்பு.

திரைப்படங்கள் ஏற்றுமதி பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு ஒன்றினை திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வராத காரணத்தால், இதை திரு. வேடசந்தூர் பால் சுப்பிரமணியன் அவர்கள் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வேடசந்தூர் வி. பி. பால்சுப்பிரமணியன் : தலைவரவர்களே, ''இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம் சமீபத்தில் திரைப்படங்களுக்கான விலையை உயர்த்தி விட்டதால், இலங்கைக்கு ஏற்றுமதியாக வேண்டிய 36 திரைப்படங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதால் தமிழக படத்தயாரிப்பாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், தொழிலாளர்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம் ஒரு மத்திய அரசு நிறுவனமாகும். இலங்கை அரசு அமைத்துள்ள திரைப்பட நிறுவனத்திற்கு தமிழ்ப்படங்கள் இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக விற்கப்படுகின்றன. இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம், திரைப்பட ஏற்றுமதியில் ஒரு முகவராகத்தான் செயல்படுவதாக தெரிகின்றது. கவன ஈர்ப்பு அறிவிப்பில் சொன்ன பொருள் குறித்து குறிப்பிட்ட வகையில் அரசுக்கு முறையீடு வருமேயானால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்.

4. தகவல் கோரல்.

(அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினைகள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியில் மிகவும் பதட்டமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணும் போராட்டம் நடத்துகிற........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குப் பதில் வேண்டுமானால் அவசரத் தீர்மானம் மூலமாக, 54-வது விதியின் கீழ் கொண்டு வாருங்கள்.

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவரவர்களே, நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக 2 நாட்களாக, அங்கே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நோட்டீஸ் கொடுங்கள். வரிசையாக வரும். போராட்டம் எதுவாக இருந்தாலும் நோட்டீஸ் கொடுங்கள்.

(இ) அரசு சட்டமுன்வடிவுகள், உத்திரவுகள் தமிழிலே வெளியிடாமல் இருத்தல்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தி, இம்பார்ட்டன்ட் மேட்டர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்பார்ட்டன்ட் மேட்டராக இருந்தால் என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசுவோம். திடீரென்று சபையிலே இம்ப்பார்ட்டன்ட் மேட்டர் என்று சொல்லக்கூடாது (குறுக்கீடு).

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இது மிக முக்கியமானது. இந்த அரசாங்கத்தின் சட்டமுன்வடிவுகள், உத்தரவுகள் எல்லாம், அனைத்தும் ஆங்கிலத்திலே வந்து கொண்டிருக்கின்றன. தமிழிலே வெளியிடுவது இல்லை. உத்தரவுகள் எல்லாம் ஆங்கிலத்திலே வருகின்றன. இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த உத்திரவு தமிழில் வரவில்லை என்று சொல்லுங்கள். அதற்கான தமிழ் விளக்கத்தை நான் தர ஏற்பாடு செய்கிறேன்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய கவர்னர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த அறிக்கையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ஆளுநர் அவர்கள் முதன்முதலாகத் தமிழிலேயே அவர்களுடைய உரையை நிகழ்த்தியது நாம் அனைவரும் பெருமைபடக்கூடிய ஒரு விஷயம். அந்த அடிப்படையிலே மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், அகில இந்திய அளவில் நம்முடைய அகில உலக மேதை, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரை ஆங்கிலம் நீடிக்கும், அங்கே இந்தி திணிக்கப்படாது என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் நம்முடைய அரசு